# முள்ளிவாய்க்கால் இறுதி மோதலின் போதும் தீர்வு கிடைக்குமென மக்கள் நம்பியிருந்தனர்

## நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக யாழ். அரச அதிபர்

யோ.நிமல்ராஜ் Nimalraj

Thinakkural, 2010. Nov. 05, P. 02

முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்ட மோதல்கள் நடைபெற்ற இறுதித் தருணத்தில் கூட ஏதாவது தீர்வு கிடைத்து மோதல்கள் நிறுத்தப்படுமென்றும் தமது வாழ்வும் உடைமைகளும் பாதுகாக்கப்படுமெனவும் மக்கள் நம்பியிருந்தனர் என்று யாழ்.மாவட்ட அரச அதிபரும் முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் அரச அதிபருமான திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

மோதலின் இறுதிக் கட்டத்தின்போது இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் தனது அதிகாரிகள் மூவர் உட்பட பல பொதுமக்கள் பலியானதாகவும் அவர் தெரிவித்தார்.

கற்றிறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று வியாழக்கிழமை லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெற்ற போது சாட்சியமளிக்கையிலேயே முல்லைத்தீவு முன்னாள் அரச அதிபரும் யாழ்.மாவட்டத்தின் தற்போதைய அரச அதிபருமான இமெல்டா சுகுமார் குறிப்பிட்டார்.

ஆணைக்குழு முன்னிலையில் திருமதி இமெல்டா சுகுமார் தொடர்ந்து தெரிவிக்கையில்;

முல்லைத்தீவில் ஷெல் தாக்குதல் இடம்பெற்ற நிலையில் மக்கள் புதுக்குடியிருப்பை நோக்கி இடம்பெயர்ந்தனர். இவ்வாறான காலப்பகுதியில் மருத்துவ பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இக்காலப்பகுதியில் நான் ஐ.நா. உதவி நிறுவனங்கள் உதவியுடன் உதவி வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தேன்.

உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் எமக்கு உதவியாகச் செயற்பட்டன. ஆனால், பொருட்களை, மருந்துப் பொருட்களை பாதிக்கப்பட்ட இடத்திற்கு விநியோகிப்பதற்கு போக்குவரத்தில் பாரிய தடை ஏற்பட்டிருந்தது.

மூன்று மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்குமாறு எமக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் 2009 ஜனவரியில் நாமும் புதுக்குடியிருப்பிற்கு இடம்பெயர்ந்தோம். அங்குதான் எமது செயலகம் இயங்கியது.

இந்நிலையில், என்னை வெளியேறுமாறும் மோதல் தவிர்ப்பு வலயத்தை பிரகடனப்படுத்துமாறும் ஜெனரல் ஜகத் ஜயசூரியா எனக்கு தொலைநகல் மூலம் ஜனவரி 22 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

நான் ஐ.நா. உதவி அமைப்புக்களுக்கும் இத்தகவலை அறிவித்திருந்தேன். எனது அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டிருந்தேன்.

ஆனால் பொதுமக்களுக்கு அனுமதி வழங்க விடுதலைப்புலிகள் மறுத்துவிட்டனர். பின்னர் நான் வவுனியாவுக்கு அன்றையதினம் (22) வந்துவிட்டேன். பின்னர் அங்கிருந்து எனது செயற்பாடுகளை மேற்கொண்டேன்.

ஆனால் முல்லைத்தீவிலுள்ள மேலதிக அரச அதிபருடனும் பிரதேச செயலர்களுடன் தொடர்புகொண்டு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பினேன்.

ஜனவரி 22 இற்கு பின்னர் மக்கள் தொடர்ச்சியாக அங்குமிங்குமென இடம்பெயர்ந்து கொண்டே இருந்தனர்.

நான் வெளியேறிய போது 3 மாதத்திற்கு தேவையான உணவுப்பொருட்கள் இருந்தது. ஆனால் அதனை சரியாக விநியோகிக்க முடியவில்லை.

பின்னர் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் பொருட்கள் முல்லைத்தீவுக்கு அனுப்பப்பட்டன.

நான் வவுனியாவில் தற்காலிகமாக இயங்கியபோது மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இவ்வருடம் ஜூலை முதலாம் திகதி முதல் எனக்கு யாழ்ப்பாண அரச அதிபராக பதவி நியமனம் வழங்கப்பட்டது.

சில தேவையற்ற காரணத்தினால் உரிய திகதியில் யாழ்ப்பாணத்தில் கடமைகளைப் பொறுப்பேற்க முடியவில்லை.

இந்நிலையில் 13 ஜூலை நான் யாழ்ப்பாண அரச அதிபராக பதவியேற்றேன்.

அதற்கு முன்னர் நான் முல்லைத்தீவிலிருந்து வெளியேறும்போது 60 சதவீதமான மீள்குடியேற்றங்கள் முல்லைத்தீவில் பூர்த்தி அடைந்திருந்தன எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் ஆணைக்குழு உறுப்பினர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த இமெல்டா சுகுமார்.

நான் 2009 ஜனவரி 22 இல் முல்லைத்தீவிலிருந்து வெளியேறிய போது அங்கு மக்கள் இருந்தனர். அன்றைய தினம் நான் மோதல் தவிர்ப்பு வலயத்தினை பிரகடனப்படுத்திவிட்டு அங்கிருந்து வெளியேறிவிட்டேன்.

அன்றைய தினம் புதுக்குடியிருப்பு மருத்துவமனை மிகவும் பாதுகாப்பாக இருந்தது. அங்கு மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் நான் வவுனியாவில் இருந்தபோது பலத்த ஷெல் தாக்குதல்கள் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுவதாக எனது மேலதிக அரச அதிபர் கூறினார்.

ஒவ்வொரு குண்டுத்தாக்குதல் குறித்தும் எனக்கு மேலதிக அரச அதிபரால் தகவல் வழங்கப்பட்டது.

மே 18 ஆம் திகதி வரை புதுமத்தாளனில் எனது அதிகாரிகள் இருந்தனர். திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், கணக்காளர் உள்ளிட்ட எனது அதிகாரிகள் அங்கு இருந்தனர்.

புதுமாத்தளனில் பிரகடனப்படுத்தப்பட்ட மோதல் தவிர்ப்பு வலயத்தில் 360,000 பொது மக்கள் அங்கு இருந்தனர்.



அத்துடன், அங்கு தங்குவோரின் எண்ணிக்கை மாறுபட்டதாக இருந்தது. ஏனெனில் சிலர் விடுதலைப்புலிகளிடம் முன்னுரிமை அடிப்படையில் அனுமதிகளைப் பெற்று அங்கிருந்து வெளியேறினர்.

அக்காலப்பகுதியில் திருகோணமலை ஊடாக கப்பல் மூலம் உணவுப்பொருட்கள் வந்தது. இவற்றை எனது அதிகாரிகளும் ஐ.சி.ஆர்.சி.யும் பெற்றுக்கொண்டு விநியோகித்தனர்.

இதன்போது விடுதலைப் புலிகளும் சில உணவுப் பொருட்களை தமது தேவைக்கு எடுத்துக்கொண்டனர். 80 வீதமான பொருட்களே பொதுமக்களை சென்றடைந்தது. 20 வீதமான பொருட்களை விடுதலைப்புலிகள் எடுத்திருக்கலாம்.

ஷெல் தாக்குதல் காரணமாக எனது அதிகாரிகள் மூவர் பலியாகியிருந்தனர். மோதல் நடவடிக்கைகளின்போது 6 கிராம சேவகர்கள் பலியாகியிருந்தனர்.

இதேவேளை, நான் முல்லைத்தீவில் இருந்தபோது இருதரப்பினருக்கும் இடையேயான மோதலின்போது இடம்பெற்ற தாக்குதலில் நான் உட்பட 13 பேர் காயமடைந்தோம்.

ஆரம்பத்தில் மக்கள் வெளியேறுவதை விடுதலைப்புலிகள் மறுத்திருந்தனர். ஆனால் மக்கள் வெளியேறும் போது விடுலைப்புலிகளும் மக்களுடன் மக்களாக வெளியேறினார்களா என்பது எனக்குத் தெரியாது.

நான் காயமடைந்த பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் எனது காயம் குறித்து பேச டாக்டர்கள் மறுத்துவிட்டனர். இவ்வாறாக மக்கள் வெளியேறிய போது வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலட்சக்கணக்கான வாகனங்கள் தீவைத்துத் கொளுத்தப்பட்டன.

மேலும் வன்னியில் உணவுப் பற்றாக்குறையால் எந்தவொரு நபரோ குழந்தையோ இறக்கவில்லை. அத்துடன், வெள்ளைக் கொடியுடன் வந்த பொதுமக்கள் எவரும் சுட்டுக்கொல்லப்படவில்லை. ஆனால் விடுதலைப்புலிகளின் வெள்ளைக்கொடி விவகாரம் குறித்து எனக்குத் தெரியாது எனத் தெரிவித்தார்.